**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 415/2016**

Deposition of the witness for Prosecution **PW** 10
Name : **பிரதாபன்**
Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (30.06.2026)

A1, A2 present , A3 absent petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2015 ம் தேதி நான் செங்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கூடுதல் பொருப்பாக அனைத்து மகளிர் காவல் நிலைய தென்காசி காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 02.10.2015 ம் தேதி உதவி ஆய்வாளர் செல்வி பதிவு செய்து வைத்திருந்த காவல் நிலைய குற்ற எண்.24/2015, பிரிவுகள் 294(பி), 498 ஏ, 506(2) இதச மற்றும் பிரிவு 4 of DP Act படி வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு அன்றைய தினம் 21.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நல்லையா, முருகையா ஆகியோர்கள் முன்னிலையில் தெருவிளக்கு டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடம் **<u>அ.சா.ஆ.5</u>** ஆகும்.

பின்னர் சாட்சிகள் சித்ரா, சண்முகத்தாய், கருப்பசாமி, நல்லையா, முருகையா மற்றும் உதவி ஆய்வாளர் செல்வி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் கடந்த 04.05.2016 ம் தேதி வழக்கின் விசாரணையை முடித்து எனது விசாரணையிலிருந்த எதிரிகள் அ.சா.1 யை வரதட்சணை கொடுமை எதுவும்

செய்யவில்லை என தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி), 498 ஏ, 506(2) இதச மற்றும் பிரிவு 4 of DP Act லிருந்து பிரிவுகள் 294(பி), 498 ஏ, 506(2) இதச ஆக மாற்றம் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் தகவல் அறிக்கையில் 08.04.2015 ம் தேதி மாலை சுமார் 4 மணி முதல் என்று சொல்லப்பட்டுள்ளதில் என்ன தேதி, என்ன நேரம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை தயார் செய்தது 02.10.2015 ம் தேதி என்றால் சரிதான். என்னிடம் கொடுத்த புகார் மனுவில் எதிரியின் பெயர் மாரியப்பன் என்று உள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையிலும் மாரியப்பன் என்றுதான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் முன்பிணையில் மாரியப்பன் என்ற மாரிச்செல்வம் என்று கொடுத்து தான் முன்பிணை வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதன் நகலையும் தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 30.05.2015 ம் தேதி முன்பிணை வாங்கிய பின்புதான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இறுதி அறிக்கையில் எதிரியின் உண்மையான பெயரை மாரியப்பன் என்ற மாரிச்செல்வம் என்று குறிப்பிட்டு செல்லவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரியின் உண்மையான பெயர் மாரிச்செல்வம் அவரது பெயர் குடும்ப அட்டை, மற்ற அனைத்து ஆவணங்களிலும் எதிரியின் பெயர் மாரிச்செல்வம் என்று தான் உள்ளது நான் அதை வாங்கி பார்வையிட வில்லை என்றால் சரிதான்.

1 வது எதிரிக்கும், அ.சா.1 க்கும் திருமணம் நடந்ததாக சொல்லும் புகைப்படம், சான்றிதழ் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல வழக்கு கோப்பில் உள்ளது. நான் இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளபடி எதிரிக்கு வழங்கியுள்ள நகல் பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது பார்வை மகஜர்படி எதிரி மாரிச்செல்வத்தின் வீடு, ராஜகோபாலன் வீடு பார்வை மகஜரில் துலங்காது என்றால் சரிதான். நான குற்ற இறுதி அறிக்கையில் சொல்லி உள்ள நிகழ்வுகள் வீட்டிற்கு உள்ளே நடந்தா இல்லை வெளியே நடந்ததா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் கொலைமிரட்டல் செய்வதால் எனது உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்படும் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அசிங்கமாக பேசியதால் அவருக்கு அவமானம் அருவருப்பு ஏற்பட்டது என்று

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் மனதை புண்படும்படியாக பேசியதாக கூறியுள்ளார். மனதை புண்படும்படியாக பேசியது, எதிரிகள் கொலை மிரட்டல் விட்டதாக கூறியது, கொடுமை செய்ததாக கூறியது எந்த தேதியில், எங்கு வைத்து நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

திருமணம் முடிப்பதற்கு முன்பு அ.சா.1 குழந்தை கருஉருவாகி இருந்தார் என்று புகாரில் கூறியுள்ளார்கள் அது சம்பந்தமாக விசாரணையில் துலங்கியதா என்றால் சரிதான் அதன் பின்பு தான் திருமணம் நடந்ததாக புகார் மனுவில் கூறியுள்ளார். திருமணம் முடிப்பதற்கு முன்பு நாட்டாமை வைத்து பேசுவதற்கு முன்பே அவர்களுக்குள் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல கர்ப்பம் தரித்தது என்பதால் பிரச்சினை ஏற்பட்டது. ஒன்னாவது எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அவரிடம் கர்ப்பம் தரித்தது குறித்து பார்க்கும்போது எதுவும் வாங்கவில்லை, ஒன்னாவது எதிரியை இது சம்பந்தமாக மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே கர்ப்பம் பெற்றிருந்ததால் ஒண்ணாவது எதிரியை அது குறித்து டி.என்.ஏ. டெஸ்டுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும், அ.சா.1 க்கும் முறைப்படி எந்த திருமணமும் நடைபெறவில்லை என்றும், எதிரியால்தான் அ.சா.1 கர்ப்பமானார் என்பதற்கு மருத்துவ சிகிச்சை எதுவும் பெறவில்லை என்பதாலும் ஒரு பிழையான பொய்யான புகார் மனுவை கொடுத்து அதன் பேரில் உதவி ஆய்வாளர் செல்வி போட்டு வைத்த பிழையான முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து ஒருதலை பட்சமாக விசாரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA — Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.30 17:26:13 +0530

Judicial Magistrate, Shenkottai